**தலைப்பு 226 – குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாம் பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கங்களின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2 ஆம் நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமானக் குறியீட்டிற்குரிய வருமானக் கணக்கு என்பன தலைப்பு 226 தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களிலிருந்து வெளிக்காட்டப்படுகின்ற நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் வகைகூறல் மீதான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது நிதிப்பிரமாணங்கள் கோவையின் 124 ஆவது நிதிப் பிரமாணத்தின் படி, அரசாங்க நிதியினை ஈட்டுதல் மற்றும் அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய நிதிகளை சேகரித்தல் அவ்வாறே அரசாங்கத்தின் அனைத்து நிதி நடவடிக்கைகளினையும் கண்காணிக்கும் பொதுவான கடப்பாடும் நிதி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரினால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத்தின் தலைவர் தனது திணைக்களத்தின் அனைத்து நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் கணக்கீட்டு உத்தியோகத்தராக காணப்படுவதுடன், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொதுத் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளிற்குள் நின்று தனக்குரிய பணிகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல், பேணிச் செல்லல் என்பன இந்தப் பொறுப்பில் உள்ளடங்கியுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 226 இற்குரிய குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தினால குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல் தொடர்பில் திட்டமிடுதல், அரசாங்க செலவினம், அரசாங்க வருமானம், மானிட மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்குகளை செயற்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியொழுகுதல் மற்றும் ஏடுகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணிவருதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலத்தில் சமர்ப்பித்தல், செயலாற்றல் சுட்டிகளின் அடிப்படையில் தொடர்புடைய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் என்பன தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி திணைக்களத்தின் கட்டுப்பாட்டு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளினதும் உறுதிப்படுத்தல் பரிசோதனையின் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் பிரிசோதனைகளினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேலே 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாகக் காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புக்களிலுள்ள பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் 2.1 முதல் 2.14 ஆம் வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது நிதிப்பிரமாணங்கள் கோவையின் 128 ஆவது நிதிப் பிரமாணத்திலுள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கீழே குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தனது கணக்குகள் மீதான கணக்களிப் பொறுப்பினை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை | அவதானிப்பு உள்ளடங்கியுள்ள அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தினால் வகுக்கப் பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக் கைகளிற்காக நிதி ஏற்பாடு களை மேற்கொள்கையில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கருத்திற்கொண்டு தமது திணைக்கள செயற்பாடுகளை வெளிப்படையாகத் திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கும் நடப்பா ண்டிற்குரிய நிகழ்ச்சித்திட்ட ங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்பட்டிராமை | 2.1.2.(அ) |
| | | 2. கொள்வனவுச் செயற்பாடுகள் போதியளவில் திட்டமிடப்பட்டிருக்காமை. | 2.2.(அ) |
| | | 3. நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றமற்ற செயற்திட்டங்கள் | 2.2.(அ) |
| | | 4. கொள்வனவுச் செயன்முறை யினை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2(ஆ) |
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட் டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றி கரமானது என்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத் திற்குக் கிடைக்கவேண்டிய கட்டணங்களை சரியாக நிச்ச யித்துக் கொள்வதற்காக அவற்றை முறைப்படியாகவும் முழுமையாகவும் காலம் தாழ்த் தாது சேகரித்துக் கொள்வதற் கும் கிடைக்கின்ற பணத்தினை கணக்கீடு செய்வதற்கும், | 1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடைந்திருக்காமை | 2.2.(அ) |
| | | 2. கொள்வனவுச் செயன்முறை யினை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் சார்பாக பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு அதிகாரத்தை வழங்குவதற்காகவும் நிறை வேற்றப்பட்ட சேவைகள் வழங் கப்படுவதனை கண்காணித்து பரீட்சிப்பதற்காக மற்றும் அந்த அரசாங்க நிதியங்களிலிருந்து அதற்காக காலம் தாழ்த்தாது சரியாகச் செலுத்துவதற்கும் இதன் மூலம் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளமை | | |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய குறைநிரப்பு ஏற்பாடுகள் தனது திணைக்களத்தில் பின்பற்றப்ப டுகின்றன என்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்களத் தினால் ஏற்பாடுகள் வெளியிடப் படுகின்றன என்றும் | 1. இணக்கமின்மை | 2.13 |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கல்களிற் காக போதியளவு உள்ளக புலனாய்வு முறையொன்று பேணப்படுகின்றது என்றும் அந்த முறையின் செயற்திறன் தன்மை அவ்வப் போது ஆராயப்படுகின்றது என்றும் | 1. வருமானக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.9 |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர் களிற்கான முற்பணக் கணக்கு களிலுள்ள குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள பணம், பொரு ட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பிற்காக போதி யளவில் முறையான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவை அவ்வப்போது மெய்மையாய்வு செய்யப்படு கின்றன என்றும் அவற்றை உரியவாறு கைதவிர்ப்புச் செய்கையில் அவ்வாறு கைதவிர் ப்புச் செய்தல் உரிய பிரமாணங்கள் மற்றும் அறிவுறு த்தல்களிற்கு இணங்குகின்றன | 1. சொத்துக்கள் முகாமைத்துவத் திலுள்ள குறைபாடுகள் | 2.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்றும் | | | |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியினால் கோருகின்ற தகவல்கள், கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை திருத்தமாக உரிய வேளையில் சமர்ப்பித்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்காமை | 2.1.1 |
| | | 2. | கொள்வனவுச் செயற்பாடுகள் போதியளவில் திட்டமிடப்பட்டிருக்காமை | 2.2 |
| 128(1)(எ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் போன்றவற்றை அறவிடுவதற்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அந்த பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் நிலுவைப் பணம் தொடர்பில் அவற்றை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் மூன்று மாதங்களிற்கு ஒருமுறை அல்லது வேறு ஏற்பாடுகளினால் குறிப்பிடப்பட்டவாறு தனக்கு அறிவிக்கப்படுகின்றது என்றும் | 1. | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிலுள்ள நிலுவைக் கடன் மீதியினை அறவிடுதல் | 2.10 |
| 128(1)(ஐ) | கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தான் பொறுப்புக் கூறவேண்டிய செலவினத் தலைப்பின் ஒவ்வோர் நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் நிதியாண்டின் இறுதியில் ஒதுக்கீட்டுக் கணக்கொன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதாக | 1. | ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள குறைபாடுகள் | 2.8(உ) |
| **நிதிப்பிரமாணம் 128(2)** – அரசாங்க வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்பு | | | | |
| 128(2)(அ) | வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீட்டை பூரணத்துவமாகவும் இயன்றளவு திருத்தமாகவும் தயாரித்தல் | 1. | எதிர்பார்த்த வருமானம் அதிகரிக்கையில் அல்லது குறைவடைகையில் வருமான மதிப்பீட்டைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 2.9 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடுதல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் அடையப்பட்டிருக்க வேண்டிய 31 பிரதான செயற்பாடுகள் காணப்பட்டதுடன், அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகள் அடையப்படுகின்ற விதத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் படி தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan), செயற்படுத்தும் கால அட்டவணை (Time Line) மற்றும் அச்செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்/பெறுபேறுகள் (Output/Outcome) என்பன மதிப்பிடப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தினால் வருமானக் குறியீட்டிற்கான வருமானங்களைச் சேகரித்தல், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, திணைக்களத்தினால் 31 பிரதான செயற்பாடுகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், அவற்றில் 20 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவ்வாறு நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகளிற்காக ரூபா 319.5 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 1948 இன் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகழ்வு அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் சட்டமாக்கப்பட்ட 1956 பிரமாணங்களிற்கும் சர்வதேச விதிகளிற்கும் அமைவாக இலங்கைக்கு வருகைதருகின்ற மற்றும் அங்கு தங்கியிருக்கின்ற வெளிநாட்டவர்களின் செயற்பாடுகளை கண்காணித்து, குடிவரவு மற்றும் குடியகழ்வு விதிகளை மீறி தங்கியிருக்கின்றவர்களை அவதானித்து கைதிசெய்து, பிடித்துவைத்து, நாட்டிலிருந்து வெளியேற்றுதல் அல்லது நாடு கடத்துவதற்குத் தேவையான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் 392 நபர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், வீசா இன்றி தங்கியிருக்கின்ற 2,739 ஆட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தூதரகங்கள் ஊடாக இரட்டை பிரசா உரிமை கோருதல் சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 21,342 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், அந்த விண்ணப்பங்களில் 7,308 விண்ணப்பங்கள் அல்லது 35 சதவீதத்திற்கு மாத்திரம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பிரசா உரிமை கோரி தூதரங்கள் ஊடாக அன்றி 17,273 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், 2017 திசெம்பர் 31 வரை அவற்றில் 5,823 விண்ணப்பங்களிற்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய

சமாப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களில் ஏறத்தாழ 34 சதவீத விண்ணப்பங்களிற்குரிய பணிகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 1984 இன் 18 ஆம் இலக்க பிரசா உரிமை அதிகாரச்சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் கீழ் ஒருவர் அல்லது இருவரும் இலங்கையராகவுள்ள பெற்றோருக்கு வெளிநாட்டில் பிறந்த பிள்ளைகளை இலங்கையில் பதிவுசெய்வதற்காக 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரை 34,924 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், அவற்றில் 11,092 விண்ணப்பங்கள் அல்லது 32 சதவீதமானவை பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.2 கொள்வனவு நடைமுறைகளின் ஊடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

(அ) கொள்வனவுச் செயற்பாடுகளை திட்டமிடுதல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் ஊடாக வழங்கல் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 952.35 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 585.28 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்பட வேண்டிய கொள்வனவுத் திட்டம் மீதான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) பிரதான கொள்வனவுத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த ரூபா 248.5 மில்லியன் பெறுமதிமிக்க 10 செயற்பாடுகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் கொள்வனவுத் திட்டத்திலும் காணப்படாத இரண்டு செயற்பாடுகளிற்காக மீளாய்வாண்டில் ரூபா 54.11 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவு நடைமுறையினை அமுல்படுத்துதல்

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.1 ஆம் பிரிவின் படி, போட்டி விலைமனு முறையினை பின்பற்றாது அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது கடவுச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.6.1 (அ), (இ) மற்றும் (ஈ) ஆம் பிரிவுகளின் படி, 2003 ஆம் ஆண்டு முதல் மீள் கொள்வனவு செய்தல் முறையின் கீழ் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு அவ்வப்போது அங்கீகாரங்கள் பெறப்பட்டிருந்தன.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.2.2 ஆம் பிரிவின் படி, விலைமனுக்களை கோருவதற்காக குறைந்தபட்ச கால எல்லையினை பேணவேண்டிய போதிலும், இரட்டைப் பிரசா உரிமை வழங்குவதற்கான XVII, XVIII மற்றும் XIX ஆம் கட்டங்களிற்காக கூறுவிலைகளைக் கோருகையில் திணைக்களத்திற்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லையினைக் குறிப்பிடாது ரூபா 474,747 இற்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.3 (அ) ஆம் பிரிவின் படி, விலைமனுக்களைத் திறக்கும் பொறுப்பினை கொள்வனவுச் சபை அங்கீகரிக்கின்ற விலைமனுக்களை திறக்கும் சபைக்கு ஒப்படைக்க முடியுமாக இருப்பதுடன், விலைமனுக்களை திறக்கும் சபையினால் ஆவணங்களில் திகதி முத்திரை இடப்பட்டு சிறு ஒப்பம் இடப்பட வேண்டிய போதிலும், 4 கட்டங்களிற்காக ரூபா 1,076,091 பெறுமதிக்கு உணவுகள் மற்றும் ஏனைய அச்சிடல் நடவடிக்கைகளிற்காகச்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்களில் திகதி முத்திரை பதிக்கப்பட்டு சிறு ஒப்பம் இடப்படாதிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 3 விலைமனுக்களிலிருந்து குறைந்தபட்ச விலைமனுவினை தெரிவுசெய்தல் சிக்கலானதாக காணப்பட்டது.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7.8 மற்றும் 7.8.4 (ஈ) ஆம் பிரிவுகளின் படி, விலைமனுக்களை பரிசோதிக்கையில் விலகல்கள் தொடர்பில் கருத்திலெடுக்க வேண்டிய போதிலும், கையொப்பமிடப்படாது அல்லது அதிகாரமுள்ள ஆளொருவர்/ஆட்களால் கையொப்பமிடப்படாததிருத்தல் பிரதான விலகலாக கருதப்பட வேண்டிய போதிலும், XVI ஆம் கட்டத்தின் விழாவினை ஏற்பாடு செய்கையில் கையொப்பமிடப்படாது சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு குறைந்தபட்ச விலை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமையால் அந்த வழங்குனரை இலக்காகக் கொண்டு ரூபா 159,500 விலை மனு தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தினால் சுற்றுலா அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று முறையாக கையேற்கப்படாது பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு முரணாக 07 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 315.02 மில்லியன் நிதி ஏற்பாட்டினை மீறி ரூபா 25.56 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு எல்லையில் இனங்காணப்பட்ட பொறுப்புக்களின் அடிப்படையில் அந்தப் பொறுப்புக்களிற்கு உரித்தான பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவற்றிற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளிற்குரிய ஒப்பந்த வேலைகள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்திய பெறுமதிகள் பொறுப்புக்களாக காட்டப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இனங்காணப்பட்ட பொறுப்புக்களிற்குரிய ரூபா 15,647,381 தொகைக்கான பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்கப்பெறாத மற்றும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாத ஒப்பந்த வேலைகள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்தப்படாத பெறுமதிகள் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.5 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 2016 மார்ச் 25 ஆந் திகதி ரூபா 7,400,000 இற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த, 2017 ஆம் ஆண்டில் முழுமையான நட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த மோட்டார் வாகனம் அகற்றப்பட்டிருக்கவில்லை. 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் இப்பணம் காப்புறுதியிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் பெறுமதிமிக்க வெற்றுக்கடவுச் சீட்டு இருப்பு புத்தகங்களில் பதிவுசெய்யப்படாதிருந்ததுடன், 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதியளவில் 10 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அத்துடன், இவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

## 2.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் சம்பந்தமாக அமைச்சினால் திருத்தப்படாதுள்ள பந்திகளிற்குரிய தொடர்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்படைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2016 | 3.6.1(இ) | ஊக்குவிப்புத் திட்டத்தில் நலன்களிற்கு உரித்தான உத்தியோகத்தர்களிற்கு மேலதிகநேர அல்லது வேறு எவ்விதப் படிகளும் செலுத்தப்பட முடியாத போதிலும், திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிற்கு அவ்வாறு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| 2016 | 3.9 | 2015 மார்ச் 24 ஆந் திகதி ரூபா 7,400,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனம் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி விபத்தில் சிக்கியமையால் முழுமையாக சேதமடைந்திருந்த போதிலும், அந்தப் பெறுமதி காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.11 | வீசா இன்றி தங்கியிருக்கின்ற 2,789 ஆட்களை சுற்றிவளைத்து கைதுசெய்தல். |

## 2.7 முகாமைத்துவ பலவீனங்கள்

2016 ஆம் ஆண்டில் நிதி மற்றும் செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் திறைசேரியினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,400,000 கிரயம் கொண்ட வாகனம் 2017 ஆம் ஆண்டில் முழுமையாக நட்டமடைந்திருந்தது. இதன் காரணமாக திறைசெரியினால் வாகனத்தின் பதிவினை இரத்துச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. காப்புறுதிக் கம்பனியிடமிருந்து முழுமையான காப்புறுதித் தொகையினை அறவிடுவதற்கு 2018 ஒக்தோபர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிலும் முன்னைய ஆண்டிலும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன

| ஆண்டு | செலவின வகை | தேறி நிதி ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | |
| 2016 | மீண்டெழும் | 1,045.32 | 1,038.53 | 6.79 | 0.64 |
| | மூலதனம் | 1,116.47 | 943.01 | 173.46 | 15.53 |
| | **மொத்தம்** | **2,161.79** | **1,981.54** | **180.25** | **8.34** |
| 2017 | மீண்டெழும் | 1,240.53 | 1,235.03 | 5.51 | 0.44 |
| | மூலதனம் | 928.20 | 561.55 | 366.65 | 39.50 |
| | **மொத்தம்** | **2,168.73** | **1,796.57** | **372.16** | **17.16** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,116.23 மில்லியன் தொகைக்கு மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிற்குப் பதிலாக அதற்கும் குறைவாக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையால் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 372.16 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மொத்தக் கிரய ஏற்பாட்டின் பிரகாரம் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சாத்தியக்கூற்று ஆய்வுகளும் கொள்வனவு நடைமுறைகளிற்குரிய செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்ட பின்னர் மொத்த நிதி ஏற்பாட்டினையும் பயன்படுத்த முடியாது போயிருந்தமையால் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 55.7 மில்லயன் அல்லது 38 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) Process re-engineering of DIE to identity the cardre positions இற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கையின் படி ரூபா 4 மில்லியன் வரை மாற்றப்பட்டிருந்ததுடன் அதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அதற்கான உள்ளபடியான செலவினம் ரூபா 2.15 மில்லியனாகக் காணப்பட்டமையால் அதன் நிதிசார் செயன்முன்னேற்றம் 22 சதவீதம் ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டில் பூரணப்படுத்துவதற்கான எதிர்பார்ப்புடன் 06 செயற்பாடுகளிற்காக ரூபா 126.59 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 29.02 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டமையால் அச்செயற்பாடுகளை மீளாய்வாண்டில் பூரணப்படுத்துவதற்கு முடியாது போயிருந்ததுடன், ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. பௌதீகச் செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒதுக்கீட்டுக் கணக்கு

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 117 மில்லியன் மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து எவ்வித செலவினமும் செய்யப்படாது அது முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 421 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 04 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை காரணமாக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 55 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.9 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

-----------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டிற்குரிய வருமானக் குறியீட்டிற்காக ரூபா 15,000 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதில் ரூபா 15,298.92 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது திருத்திய வருமான மதிப்பீட்டில் 102 சதவீதமாகக் காணப்பட்டது.

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) 20.03.02.07 ஆம் இலக்க வருமானக் குறியீடு**

------------------------------------------------------------------------

(i) 2017 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடான ரூபா 17,000 மில்லியன் தொகையினை ரூபா 15,000 மில்லியனாக திருத்துவதற்கு குடியவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு நாயகத்தினால் 2017 யூலை 31 ஆந் திகதியிடப்பட்ட DIE/FIN/13/2018 ஆம் இலக்க கடிதத்தினால் கோரப்பட்டிருந்த போதிலும், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் வீசா இன்றி தங்கியிருப்போரிடமிருந்து அறவிடுதல்கள் (Overstay), காசுப் புத்தகம் மற்றும் கணனி முறைமை என்பவற்றை ஒப்பிடுகையில் ரூபா 206,228 தேறிய வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iii) 2017 ஏப்ரல் - யூன் வரையிலான காலாண்டில் Merchant Commission & TT கட்டணமாக ரூபா 30,316,386 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், வருமானமாக ரூபா 19,182,060 தொகையே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 11,134,327 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iv) ரூபா 15,298,923,375 வருமானத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 924,021 தொகை மீளளிக்கப்பட வேண்டிய தொகையாக கழிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காணரமாக மீளாய்வாண்டில் அத்தொகை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 22601 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 39.00 | 39.00 | 30.00 | 30.08 | 143.00 | 140.97 |

**நிலுவையிலுள்ள கடன் மீதிகளை அறவிடுதல்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றின் படி அத்திகதியிலுள்ளவாறு அறவிடுதல்கள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 380,007 ஆகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவையான மீதிகள் 01 முதல் 14 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் அமைந்திருந்தன. அந்த கடன் நிலுவைகளை அறிவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.11 பொது வைப்புக் கணக்கு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா 6.64 மில்லின் கூட்டுத்தொகையாகும். அதில் காணப்பட்ட 02 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புக்கள் தவிர்ந்த) ரூபா 414,852 தொகையான 37 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 வங்ககிக் கணக்குகளை செயற்படுத்துதல்

நிதிப்பிரமாணம் 395 (அ) பிரகாரம் கூட்டப்பட்ட அல்லது கழிக்கப்பட்ட இணங்காணப்படாத வைப்புக்கள் அல்லது கொடுப்பனவுகளிற்குரிய பட்டோலைகள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 93,218,720 இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் ரூபா 251,290,357 இனங்காணப்படாத கொடுப்பனவுகளிற்கு பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.13 இணக்கமின்மைகள்**

**2.13.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 118(5) | வருமானத்திலிருந்து மீள அறவிடப்பட்டிருந்த ரூபா 558,711 தொடர்பில் நிதிப்பிரமாண த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(ஈ) | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகளைத் தாண்டிய வைப்புக்களே காலங்கடந்த வைப்புக்களாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், அந்த வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுதலும் வேண்டும். இருப்பினும், 2017 பெப்ரவரி 08 மற்றுறம் 09 ஆந் திகதிகளில் வைப்புச்செய்யப்பட்ட மீள அறவிடப்பட்டிருந்த வைப்புக்கள் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக் குழுவின் 2010 சனவரி 04 ஆந் திகதிய NSCC/2/4/3 /2/2/13 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகழிவுத் திணைக்களத்திற்கான ஊக்கு விப்புத் திட்டத்தினை நடை முறைப் படுத்துவதற்கான சுற்றறிக்கை மற்றும் 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதிய EST-8/ALLOW/04/125/2 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகழிவுத் திணைக்களத்திற்கான ஊக்கு விப்புத் திட்டத்தினை திருத்துவதற்கான சுற்றறிக்கை | ஊக்குவிப்புத் திட்டத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களிற்கு தாபனவிதிக் கோவையிலுள்ள நியதிச்சட்ட ஏற்பாடுகளைத் தவிர்த்து ஏனைய மேலதிகநேர மற்றும் ஏனைய படிகள் உரித்தற்றவையாகக் காணப்படுகின்ற போதிலும், அதற்கு முரணாக குழுவின் உறுப்பினர்கள் அல்லாத பிரதிக் கட்டுப்பாட்டாளர், உதவிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் ஏனைய பதவியணியினருக்காக ரூபா 1,886,000 படிகள் 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தன. |

## 2.14 மனிதவள முகாமைத்துவம்

### 2.14.1 இணைக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளனி வேதனங்கள்

திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமாகக் காணப்பட்ட மற்றும் மேலதிகப் பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளனி வேதனங்கள் செலவின வகுதியில் ரூபா 580.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 61 | 52 | 9 |
| (ii) மூன்றாம் நிலை | 498 | 342 | 156 |
| (iii) இரண்டாம் நிலை | 439 | 397 | 42 |
| (iv) ஆரம்பநிலை | 145 | 132 | 13 |
| (v) தற்காலிக/ஒப்பந்தம் | 10 | 7 | 3 |
| மொத்தம் | 1,153 | 930 | 223 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 223 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், இந்தப் பதவியணியினர் வெற்றிடங்கள் 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் படி ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் தாக்கம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தேவையினைக் காட்டிலும் கூடுதலாக மதிப்பிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் பதவியணியினரை பயிற்றுவிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 5.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 3.11 மில்லியன் அல்லது 62 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.